| Headline | Speak Good English at all places | | |
|---|---|---|---|
| Date | 14 May 2005 | | |
| Media Title | Tamil Murasu | Section | Singapore |
| Page No | 1 | Size | 5colx |

# “எல்லா இடங்களிலும் நல்ல ஆங்கிலம் பேசுக”



'நல்ல ஆங்கிலம் பேசுக' இயக்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாவில் பிரதமர் லீ.

சிங்கப்பூரர்கள் வீடு, வேலையிடம், சமூக நிகழ்ச்சிகள் உள்ளிட்ட எல்லா இடங்களிலும் நல்ல ஆங்கிலம் பேச முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"நல்ல ஆங்கிலம் பேசுக" இயக்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா நிகழ்ச்சியில் அவர் வெள்ளிக்கிழமை காலை கலந்துகொண்டு பேசுகையில் அனைத்துலக வர்த்தக மொழியாக ஆங்கிலம் விளங்குவதால் நாம் நல்ல ஆங்கிலத்தில் பேசுவது அவசியமானது என்று குறிப்பிட்டார்.

நமது தாய்மொழியுடன் ஆங்கில அறிவும் உள்ளதால் தற்போது சிங்கப்பூரர்களுக்கு மற்ற ஆசிய நாட்டினரை விட சிறப்பான போட்டித்திறன் உள்ளது என்றாலும் நாம் இன்னும் சிறப்பாக ஆங்கில மொழியைப் பேச வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சிறந்த ஆங்கிலம் பேசுவது என்பது பெரிய பெரிய வார்த்தைகளைப் பயன்படுத்தி வார்த்தை ஜாலம் செய்வது அல்ல என்றும் சிங்கப்பூரர் தங்களது பாணியிலேயே அதே சமயத்தில் சரியான வாக்கியங்களைக் கொண்ட ஆங்கிலத்தைப் பேசுவது தேவையானது என்றும் பிரதமர் லீ கூறினார்.

சில நேரங்களில் நல்ல ஆங்கிலத்தையும் சில நேரங்களில் நமது தற்போதைய பாணி ஆங்கிலத்தையும் பேசுவதைவிட எல்லா நேரத்திலும் நல்ல சரியான ஆங்கிலத்தில் பேசுவது எளிமையானதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நல்ல ஆங்கிலம் பேசுவதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர் சிறப்பான பங்காற்ற முடியும்.

ஆங்கில மொழிப் பாட வகுப்புகளை வேடிக்கையாகவும் உயிரோட்டம் உள்ளதாகவும் ஆக்கி மாணவர்கள் அந்த மொழியை நல்ல முறையில் அறிந்து கொள்ள ஆசிரியர்கள் உதவ முடியும் என்று அவர் சொன்னார்.

பெற்றோரைப் பொறுத்தவரையில் ஆங்கிலம் அறிந்தவர்கள் தங்கள் குழந்தைகளுடன் ஆங்கிலத்தில் அடிக்கடி பேசுவதன் மூலம் அவர்கள் ஆங்கில மொழியின் உச்சரிப்பு, இலக்கணம் போன்றவற்றைத் தங்கள் குழந்தைகள் சரியாக புரிந்துகொள்ளச் செய்யலாம் என்றார் பிரதமர் லீ. தொழில் அதிபர்கள் குறிப்பாக சேவைத் துறைகளில் உள்ளவர்களும் வேலை இடங்களில் அவர்களது ஊழியர்களை நல்ல ஆங்கிலத்தில் பேசச் செய்வதின் மூலம் இந்த இயக்கத்தில் முக்கிய பங்காற்றமுடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நல்ல ஆங்கிலத்தைப் பயன்படுத்தவேண்டும் என்ற கொள்கையைச் சிங்கப்பூர் மட்டும் பின்பற்றவில்லை. சீனா, கொரியா, தாய்லாந்து, தைவான், மலேசியா உள்ளிட்ட பல நாடுகளும் அவர்களின் ஆங்கில மொழியின் தரத்தை உயர்த்த பல திட்டங்களை அமல்படுத்தி வருகின்றன என்று அவர் கூறினார்.

வரும் ஆண்டில் சிங்கப்பூரில் இரு முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெறவிருப்பதைச் சுட்டிய பிரதமர் லீ அந்த நிகழ்ச்சிக்கு ஆயிரக்கணக்கான முக்கிய பிரமுகர்கள் இங்கு வரவிருப்பதால் அவர்களிடம் நாம் நல்ல ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்றும் குறிப்பாக ஹோட்டல்களில் வரவேற்பாளர்களாக இருப்பவர்கள், டாக்சி ஓட்டுநர்கள், கடைகளில் விற்பனையாளர்களாகப் பணியாற்றுவோர் போன்ற விருந்தோம்பல் துறைகளில் உள்ளவர்கள் நல்ல ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்த ஆண்டில் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் அனைத்துலக ஒலிம்பிக் சங்க கூட்டம் தொடர்பில் சுமார் 5000 வருகையாளர்களும், அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலக வங்கி, அனைத்துலக பண நிதியம் ஆகியவற்றின் ஆண்டுக் கூட்டத்தில் சுமார் 16000 உலகின் மிகச் சிறந்த நிதி நிபுணர்கள், வங்கி அதிகாரிகள், வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் பிரதமர் லீ தமது பேச்சில் குறிப்பிட்டார். நல்ல ஆங்கிலம் பேசுக இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் கடந்த 5 ஆண்டுகளாக டேவிட் வோங் ஆற்றிய பணிகளுக்குப் பிரதமர் லீ பாராட்டுத் தெரிவித்தார்.

## TRANSLATION

**Headline**

# SPEAK GOOD ENGLISH AT ALL PLACES

**Body Text**

Singaporeans should endeavour to speak good English at home, workplace and at social functions, says Singapore's Prime Minister, Lee Hsien Loong.

Speaking at the launching ceremony of the 5th "Speak Good English" Movement yesterday, Mr Lee noted that speaking good English has become important as it is the language of international trade and commerce.

He emphasized that although our ability to speak English in addition to our mother tongue has given us a competitive edge over other Asian countries, it is important that we improve the standard of our English.

Speaking good English does not mean using bombastic words but speaking normally and yet correctly and clearly, said Mr Lee.

Mr Lee also pointed out that instead of alternating between good English and Singlish , it would be simpler if we spoke in good English all the time.

Teachers and parents play an important role in speaking good English.

Teachers can help students learn the language well by making English lessons fun and lively.

English speaking parents can make their children understand pronunciation and grammar by speaking more often with them.

Employers, especially those in the service industries, can play an important role by encouraging their employees to speak good English.

Singapore is not the only country that aims to speak good English. Many other countries, including China, Korea, Thailand, Taiwan and Malaysia are also implementing plans to raise their standard.

Mr Lee highlighted that two important events are scheduled to be held in Singapore, next year. As thousands of VIPs and dignitaries are expected in Singapore for these events, he emphasized that it is important that we are able to communicate with these visitors in good English. Staff at hotels, taxi drivers, sales staff and those in the service industry must speak good English, he urged.

Mr Lee also mentioned that around 5000 delegates are expected in Singapore next year in conjunction with the International Olympic Council. In September next year, we can expect a further 16000 visitors, including leading financial experts, bankers and Industry leaders in conjunction with the World Bank and IMF conferences here,, he added.

PM Lee also praised Mr David Wong, the outgoing chairman of the "Speak Good English" movement for his leadership and contributions over the last 5 years.